# சட்டம் மற்றும் நீதி அமைச்சகம்

(சட்டமியற்றுத்துறை)

புது டில்லி, 2010, ஜனவரி 19

பின்வரும் நாடாளுமன்றச் சட்டம், மாநிலங்களின் ஒருபாதிக்கு குறையாத சட்டமன்றத்தினரால் ஏற்புறுதி செய்யப்பட்ட பின்பு அதற்கான தீர்மானங்களின் மூலமாக 2010, ஜனவரி 18 அன்று குடியரசுத்தலைவரின் இசைவினைப் பெற்று, பொது தகவலுக்காக ஈங்கிதனால் வெளியிடப்பபடுகிறது:-

## 2009ஆம் ஆண்டு அரசமைப்பு (தொண்ணூற்றைந்தாம் திருத்தச்) சட்டம்

[2010, ஜனவரி 18]

இந்திய அரசமைப்பினை மேலும் திருத்தம் செய்வதற்கான ஒரு சட்டம்.

இந்தியக் குடியரசின் அறுபதாம் ஆண்டில் நாடாளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:-

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2009ஆம் ஆண்டு அரசமைப்பு (தொண்ணூற்றைந்தாம் திருத்தச்) சட்டம் என்று வழங்கப்பெறலாம்.

   (2) இது, 2010 ஜனவரி 25ஆம் நாளன்று செல்லாற்றல் பெறும்.

334–ஆம் உறுப்பிற்கான திருத்தம்.

2. அரசமைப்பின் 334ஆம் உறுப்பில், ''அறுபது ஆண்டுகள்" என்ற சொற்களுக்குப் பதிலாக ''எழுபது ஆண்டுகள்" என்ற சொற்கள் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.